**சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டம் -2020**

சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 செப்தெம்பர் 05 ஆம் திகதிய 5792–எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் II பீ(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வன வளப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் என்பன செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன.

சமுதாயத்தின் பாதுகாப்பு நோக்கத்திற்காகவும் நன்மைகளிற்காகவும் இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட இடங்களிலுள்ள சூழல் தொகுதி முகாமைத்துவ நிலையை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும்.

ஆரம்ப நில அளவை திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், இயற்கை வளங்களின் நிலைபேறான பயன்பாடு மற்றும் மனிதன் – யானை சகவாழ்வு மற்றும் பாதுகாக்கப்பட்ட பிரதேச முகாமைத்துவம் தொடர்பான நிறுவகரீதியான இயலளவுகளை முன்னேற்றுதல் போன்ற பெயர்களிலான நான்கு பிரதான கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 7,827.3 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 45 மில்லியனானதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 திசெம்பர் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2021 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எனினும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பணிகள் பூர்த்திசெய்யப்பட வேண்டிய காலம் 2022 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டு குறைபாடுகள் / கணக்காய்வு விடயங்கள் | தொகை ரூபா | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மொத்த செயற்திட்ட செலவினம் ரூபா 1,157,591,574 ஆக காண்பிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு நேரொத்த செலவினம் ரூபா 1,128,947,497 ஆக வனசீவராசிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. எனினும், வேறுபாடுகளை இனங்காண்பதற்கு இணக்கமொன்றை தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 28,644,077 | வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சின் இறுதிக் கணக்குகளில் 2020 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினமாக குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூபா 1,128,947,497 ஆகும்.<br><br>மீளளிப்பு மற்றும் முற்பண தீர்த்தல்களாக நிதி அமைச்சிற்கு அனுப்பப்பட்ட மீளப்பெறல் விண்ணப்பங்களில் 2020 ஆம் ஆண்டிற்காக செய்யப்பட்ட செலவினம், 2019 திசெம்பர் மாதத்தின் போது செய்யப்பட்ட செலவினம் மற்றும் 2019 ஆம் ஆண்டில் கிடைத்த முற்பணங்களின் தீர்த்தல்கள் உள்ளடங்கியுள்ளது.<br><br>அதனால் அமைச்சினால் கணிப்பிடப்பட்ட செலவினம், ஆண்டின் போது செயற்திட்டத்தின் மூலம் செலவிடப்பட்ட உள்ளபடியான செலவினங்களுக்கு சமமானதாக இல்லை. | அதன் பிரகாரம் ஒப்பீடு செய்யப்பட்டு இணக்கஞ் செய்யப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள்/ கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| செயற்திட்டத்தின் செயற்பாட்டு கைநூல் 2.1.1 | செயற்பாட்டு குழு கூட்டம் காலாண்டு ரீதியாக நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டிற்காக செயற்திட்டத்தின் செயல்முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அவ்வாறான குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | தவிர்க்க முடியாத நிலைமையின் கீழ் 2020 ஆம் ஆண்டில் எந்தவொரு செயற்திட்ட செயற்குழு கூட்டமும் நடாத்துவதற்கு செயற்திட்டத்திற்கு முடியாதிருந்தது. உரிய அமைச்சரின் செயலாளர் செயற்குழு கூட்டத்தின் தலைவராகும். அதன் விளைவாக உரிய ஆண்டில் செயற்குழு கூட்டத்தின் தலைமையை வகிப்பதற்கு குறித்த அமைச்சின் செயலாளர்களில் மூவர் மற்றும் அதற்கு முன்னர் பெயரிடப்பட்ட அங்கத்தவர்களில் அநோகமானோர் இடம்மாற்றம் பெற்றுச்சென்றமை அல்லது ஏனைய பதவிகளுக்கு பதவி உயர்வு பெற்றமையினால் செயற்குழுவை மீண்டும் நியமிக்கப்பட்டதன் காரணமாக பெயர் முன்மொழிவை கையளித்தலில் தாமதம் ஏற்பட்டது. மேலும், கொவிட் - 19 நிலைமையும் அதற்கு ஒரு காரணமாகும். | உரிய கூட்டங்கள் குறித்த காலத்தில் நடாத்த வேண்டியிருந்ததுடன், நோக்கங்கள் மற்றும் கால இலக்குகளின் பிரகாரம் செயற்திட்ட செயலாற்றல் மீளாய்வு செய்யப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

## 3.1 செயற்திட்ட செயற்பாடுகளின் பௌதீக செயல்முன்னேற்றம்.

| கூறுகள் | செயற்பாடுகள் | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | தாமதம் / கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப் பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | அடையப்பட்ட செயலாற்றல் சதவீதம் | | | |
| (i) 2(அ) | வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் திட்டமிடப்பட்டுள்ள செயற்பாடுகள் | 100 | 5 | கீழ் மட்ட செயல் முன்னேற்றம் | வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் (DWC) யால மற்றும் உடவளவ பூங்காவை அண்மித்து வாழ்கின்ற மக்களுக்காக 2(அ) கூறின் கீழ் ஜீவனோபாய அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் விவசாயத்திற்கான நீர் வழங்கல் நடவடிக்கைகள் சிலவற்றை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், கொவிட் - 19 தொற்றுநோயின் காரணமாக 2020 ஆம் ஆண்டில் சில பிரதேசங்கள் மூடப்பட்டிருந்ததுடன், நடமாட்டக் கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டிருந்தது. | அதன் பிரகாரம் உரிய நடவடிக்கைகளை அமுல்படுத்துதல் வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (ii) | 3(இ) | வன பாதுகாப்பு திணைக்களத்தினால் திட்டமிடப்பட்டுள்ள செயற்பாடுகள். | 100 | 10 | கீழ் மட்ட செயல் முன்னேற்றம் | உப கூறு 3(இ) இன் பிரகாரம் வெளிக்கள பயிற்சியினை நடத்துவதற்கு திணைக்களத்திற்காக நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. வன பாதுகாப்பு திணைக்களம் பல்வேறு வெளிக்கள மட்டங்களில் பயிற்சி அளிப்பதற்காக நிதியினை செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும், கொவிட் - 19 தொற்றுநோயின் காரணமாக திட்டமிடப்பட்ட பிரகாரம் பயிற்சியினை நடத்துவதற்கும் நிதியினைச் செலவிடுவதற்கும் முடியாதிருந்தது. | அதன் பிரகாரம் செயற்பாடுகளை அமுல்படுத்துதல் வேண்டும். |
| (iii) | 2(ஆ) | ஜீவனோபாய பாதுகாப்பிற்கான யானை மனிதர் சகவாழ்வு | 100 | 55 | ஒட்டு மொத்த பௌதீக செயல் முன்னேற்றமும் கீழ் மட்டத்தில் காணப்பட்டமை. | 2020 ஆம் ஆண்டின் போது உபகூறு 02பீ இன் கீழ் குருநாகல் மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களின் கிராமங்களில் யானை வேலி மற்றும் போக நெற்பயிர்ச்செய்கை வயல்வெளிகளில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் Covid - 19 தொற்றுநோய் பரவலின் காரணமாக இரண்டு மாவட்டங்களிலும் நிகழ்ச்சித் திட்டங்கள் தற்காலிகமாக நிறுத்துவதற்கு உத்தியோகத்தர்களுக்கு | அதன் பிரகாரம் செயற்பாடுகளை அமுல்படுத்துதல் வேண்டும். |

ஏற்பட்டிருந்தது. தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்திருந்த போதிலும் சுகாதார அதிகாரிகள் (பொது சுகாதார பரிசோதகர்கள்) மற்றும் கிராம உத்தியோகத்தர்களினால் உரிய பிரதேசங்களுக்கு பயணத்தடை செய்யப்பட்டிருந்தமையினால் மக்கள் பங்களிப்பினை பெறமுடியாதிருந்தது. நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கை அடைந்து கொள்வதில் பிரதான கஷ்ட நிலை இதுவாகும். அதற்கு மேலதிகமாக பொது திறைசேரியினால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கை 3(ஆ) இல் செயல்முன்னேற்றம் தொடர்பில் பாரியளவான அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்ததுடன் 2020 யூலை 08 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட திறைசேரி சுற்றறிக்கை வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கும், வனப் பாதுகாப்பு திணைக்களத்திற்கும் ரூபா 120 மில்லியன் பெறுமதியான 03 பிரதான நிர்மாணங்களை அமுல்படுத்தும் செயல்முன்னேற்றத்திற்கு இடையூறாக இருந்தது. 2020 திசெம்பர் 28 ஆம் திகதி அமைச்சரவை பத்திரத்தின் மூலம் இவை நீக்கப்பட்டிருந்ததுடன் 2020

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | யூலை மாதம் முதல் நிதி சார் அல்லது பௌதீக செயல்முன்னேற்றம் ஒன்றை பெறுவதற்கு முடியாதிருந்தது. | |
| (iv) | 3(ஆ) பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களின் இயற்கையை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா செயற்திட்டம் | 100 | 52 | ஒட்டு மொத்த பௌதீக செயல் முன்னேற்றமும் கீழ் மட்டத்தில் காணப்பட்டமை . | -மேற்படி- | அதன் பிரகாரம் செயற்பாடுகளை அமுல்படுத்துதல் வேண்டும். |
| (v) | வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் திட்டமிடப்பட்டுள்ள செயற்பாடுகளின் சராசரியான பௌதீக செயல்முன்னேற்றப் பெறுமதி | 100 | 47 | கீழ் மட்ட செயல் முன்னேற்றம் | இரண்டு திணைக்களங்களினாலும் அமுல்படுத்தப்படுகின்ற சகல அபிவிருத்தி செயற்பாடுகளும் அவர்களின் ஒதுக்கப் பிரதேசம் அல்லது பூங்கா அருகில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் தாபிக்கப்பட்டுள்ளது.<br><br>தற்போதைய செயற்பாடுகள் 2019 மற்றும் 2020/2021 காலத்தில் திட்டமிடப்பட்டிருந்ததுடன். செயலாற்றலும் பல்வேறு அளவுகளை கொண்டிருந்தது.<br><br>இது தொடர்பாக பொது திறைசேரியினால் விநியோகிக்கப்பட்ட (2020 | அதன் பிரகாரம் செயற்பாடுகளை அமுல்படுத்துதல் வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | யூலை 08 ஆம் திகதிய) சுற்றறிக்கை காரணமாக 50 நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. அபிவிருத்தி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக அமைச்சரவையினால் 2020.12.28 ஆம் திகதியளவில் பின்னர் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இந்த நிறுத்தி வைத்தல் ஆறு மாத காலமான நீண்ட காலமாக இருந்ததுடன் அது செயல் முன்னேற்றத்திற்கு பாதகமாக தாக்கமளித்திருந்தது. | |
| (vi) | வன பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் திட்டமிடப்பட்டுள்ள செயற்பாடுகளின் சராசரியான பௌதீக செயல்முன்னேற்றப் பெறுமதி | 100 | 59 | கீழ் மட்ட செயல் முன்னேற்றம் | -மேற்படி- | -மேற்படி- |
| (vii) | வன பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் செயற்திட்டத்தின் ஒட்டு மொத்த செயல் முன்னேற்றம் | 100 | 65 | கீழ் மட்ட செயல் முன்னேற்றம் | தற்போதைய நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தும் செயற்திட்டம் (PIP) 2019 முதல் இரண்டு திணைக்கங்களின் செயற்பாடுகள் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ அலகின் செயற்பாடுகளை உள்ளடக்கி இருந்தது. 2017 மற்றும் 2018 ஆம் | செயற்திட்டங்களை அமுல்படுத்தும் திட்டத்தின் பிரகாரம் செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட வேண்டும். |

ஆண்டுகளின் போது பூர்த்தி செய்யப்பட்ட வேலைகள் தற்போதைய நிகழ்ச்சித்திட்டத்தில் அமுல்படுத்தும் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்தமையினால் செயல்முன்னேற்றம் 65 சதவீதம் ஆக குறைத்து காணப்பிக்கப்பட்டிருந்தது. 3.1.iv இல் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் திறைசேரி சுற்றறிக்கை ஆறு மாதகால தாமதம் மற்றும் குறைவான செயல்முன்னேற்றத்திற்காக

பிரதான காரணமாக இருந்தது. தாமதத்தை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த செயல்முன்னேற்றங்கள் குறித்த சேரத்தில் சமர்ப்பிக்கப்பட முடியும்.

**3.2**

**ஒப்பந்த முகாமைத்துவம்**

| **கணக்காய்வு விடயங்கள்** | **முகாமைத்துவத்தின் பதில்கள்** | **கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** |
| --- | --- | --- |
| செயற்திட்ட கடன் உடன்படிக்கையின் பெறுமதி அ.டொலர் 45 மில்லியன் ஆக இருந்ததுடன் 2020 வரையில் அதில் அ.டொலர் 35 மில்லியன் வரை வீழ்ச்சியடைந்திருந்ததுடன் செயற்திட்டத்துக்காக தயாரிக்கப்பட்ட | செயற்திட்டத்தின் (ESCAMP) பெறுகை திட்டத்தை அமுல்படுத்துதல் உலக வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட STEP என்ற இணைய வழி முறைமை ஊடாக இருந்தது. அமுல்படுத்தப்படுகின்ற இரண்டு நிறுவனங்களின் மதிப்பீடுசெய்யப்பட்ட செலவினங்களுடன் அபிவிருத்தி | பெறுகைகளை சரியாக இனங்கண்டு அவ்வப்போது மீளாய்வாய்வு செய்யப்பட வேண்டும். |

பெறுகை திட்டத்தில் 544 செயற்திட்ட செயற்பாடுகளுக்காக அ.டொலர் 53.8 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. ஒட்டுமொத்த செயற்திட்ட கிரயத்தையும் விஞ்சாதிருந்த பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.
மிளாய்வாண்டின் இறுதியில் இந்த திட்டத்தின் கீழ் ரூபா 27 மில்லியன் பெறுமதியான 299 செயற்பாடுகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் செயற்திட்டத்தை தயாரித்தல் மற்றும் அமுல்படுத்துதல் நலிவான முகாமைத்துவத்தின் காரணமாக மொத்த திட்டத்திலும் 54.96 சதவீதம் இரத்துச்செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

இதன் காரணமாக செயற்திட்டத்தில் இருந்த எதிர்பார்த்த விளைவுகளின் அளவு மற்றும் தரத்தன்மை தொடர்பாக கணக்காய்வின் பிரகாரம் ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

செயற்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன். செயற்திட்ட முகாமை அலகினால் STEPS முறைமைக்கு ஊக்கமளிக்கப்படுகின்றது. கிரயத்தை உள்ளடக்குவதற்கான எல்லையோ அலல்து உச்சமோ காணப்படாதிருந்ததுடன் சிலவேளை அது மொத்த செயற்திட்டத்தின் பாதீடு அ.டொலர் 35 மில்லியனை விஞ்சக்கூடியதாக இருந்தது. எனினும் பூர்த்தி செய்யப்பட்ட செயற்பாடுகளின் கிரயம் மற்றும் தற்போது காணப்படுகின்ற நிர்மாணங்களுக்காக செலவிடப்பட்ட தொகை அ. டொலர் 35 மில்லியன் பாதீட்டை விஞ்சி இருக்கவில்லை.

இரண்டு திணைக்களங்களினாலும் வழங்கப்படுகின்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பெறுகை திட்டத்தில் சகல செயற்பாடுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும் அமுல்படுத்துகின்ற நிறுவனங்களின் முன்னுரிமை மாற்றங்களின் பிரகாரம் காரணமாக இந்த உள்ளடக்கங்களில் மாற்றங்கள் ஏற்பட முடியும். கடந்த காலத்தில் இந்த முறைமை மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் அதிகமானதாகும். எனினும் இந்த நிலைமையை கட்டுப்படுத்துவதுடன் எதிர்காலத்துக்கு ஈடுசெய்யக்கூடிய சில வேறுபாடுகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது.

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்**

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் செல்லுபடியான உடன்படிக்கையின்றி அரச மரக் கூட்டுத்தாபனத்தின் கட்டிடம் ஒன்றில் செயற்திட்ட அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. | அரச மரக் கூட்டுத்தாபனத்துக்கு (STC) உரியதான "சம்பத்பாய" இல் செயற்திட்ட முகாமைத்துவ அலகினால் பயன்படுத்தப்படுகின்ற உள்ளபடியான பிரதேசங்கள் மற்றும் உடன்படிக்கையில் கான்பிக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கிடையில் சிற்சில முரண்பாடுகள் காணப்பட்டன. இந்த முரண்பாடுகள் செயற்திட்டத்தின் (ESCAMP) உள்ளக கணக்காய்வினால் பூர்த்தி அளவிடல்களுடன் சரிசெய்யப்பட்டிருந்தது. தற்போதைய உடன்படிக்கையை சரிசெய்யுமாறு கோரப்பட்டிருந்தது.<br><br>அதன் பிரகாரம் உரிய தகவல்களை கோரி மற்றும் பதிலை எதிர்பார்த்து இன்னும் இரண்டு நிறுவனங்களுக்கு (செயற்திட்டத்தின் அல்லாத போதும் அச்சூழலில் தாபிக்கப்பட்டுள்ள) கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அரச மரக் கூட்டுத்தாபனத்துடன் கலந்துரையாடல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதுடன் சரியான அளவைகள் மற்றும் தகவல்கள் உடன் புதிய உடன்படிக்கை பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். | உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டும். |

**3.4 மனித வள முகாமைத்துவத்திற்குரிய பிரச்சினைகள்**

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | பதிலளிக்கப்படவில்லை. | செயற்திட்ட பதவியணியினர் |

| | | |
|---|---|---|
| செயற்திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 05 பதவியணியின் பதவிகளுக்காக 06 வெற்றிடங்கள் காணப்பட்டன. | | அவ்வப்போது மீளாய்வாய்வு செய்யப்பட வேண்டும். |

**3.5 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| i. | கூறு 01 - நிலத்தோற்றத்தை அடிப்படையாகக் கொண்ட திட்டம் மற்றும் முகாமைத்துவ கூறின் கீழ் திருத்தப்பட்ட மதிப்பீட்டின் மூலம் இனங்காணப்பட்ட ரூபா 117 மில்லியன் பெறுமதியான நிலத்தோற்ற முகாமைத்துவத்தின் இரண்டு திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | முதலாவது கூறின் நிலத்தோற்ற முகாமைத்துவ திட்டங்களின் உள்ளபடியான செயற்பாட்டு நடவடிக்கைகள் 2017 யூன் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது.<br><br>ஹுருலு - கவுடுல்ல - கந்தளாய் (HKK) வலயம் (ஹெக்டேயர் 530,000) இது முதலாவது நிலத்தோற்ற முகாமைத்துவ திட்டத்திற்கான வலயமாக இருந்ததுடன் முகாமைத்துவம், பாதுகாப்பு, சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் தொடர்பான ஆரம்ப ஆய்வு செயற்திட்டம் பதவியணியினரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்பின்னர் மூன்று பிரிவுகள் தொடர்பான விரிவான ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக மூன்று விஷேட நிபுணர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். தேவையான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. அந்த தகவல்கள் மற்றும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஹுருலு – கவுடுல்ல – கந்தளாய் இற்கான முதலாவது நிலத்தோற்ற முகாமைத்துவ திட்டம் பிரதான தரப்பினரின் பங்குபற்றலுடன் 2019 இன் போது TEAMS 'Consultants' இனால் அபிவிருத்தி செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.<br><br>சிங்ஹராஜ வன ஒதுக்கத்திற்கான இரண்டாவது வன நிலத்தோற்ற முகாமைத்துவ திட்டம் 2019 ஒக்டோபர் மாதத்தின் போது இந்த பணிக்காக மதியுரையாளரை தெரிவு செய்வதற்காக திறந்த கேள்வி | அதன் பிரகாரம் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கோரப்பிட்டிருந்ததுடன் 2020 பெப்ரவரி மாதத்தின் போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இந்த மதிவுரையாளர் குழு வெளிநாட்டு தலைமையிலான மதிவுரையாளருடன் உள்நாட்டு நிபுணர்கள் ஏழு பேரினையும் உள்ளடக்கி இருந்தது. இந்த HKK செயற்பாட்டு வலயம், மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் பின்பற்றி செல்லப்பட்டிருந்தது. 2021 யூன் வரையில் இந்த பயிற்சி வேலைகளில் 95 சதவீதத்திற்கு அண்ணளவான அளவொன்று பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 2021 ஆகஸ்ட் வரையில் சிங்கராஜ வன ஒதுக்கத்திற்கான நிலத்˜தோற்ற முகாமைத்துவ திட்டம் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஆரம்ப திட்டத்தின் பிரகாரம் இது 2021 மார்ச் 15 ஆம் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் இந்த எழுத்திலான ஆறு மாத தாமதத்திற்காக Covid 19 நிலைமை தாக்கமளித்திருந்தது. | |
| ii. | செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் கூறு 01 இற்காக அமுல்படுத்தும் முகவராண்மை நிறுவனமாக இனங்காணப்பட்டிருந்த நிலைபேறான அபிவிருத்தி செயலகம் கணக்காய்வு வரையிலும் மேற்கூறப்பட்ட அலுவலகம் தொடர்ச்சியான பங்களிப்பை வழங்கியிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்திகள் அமைச்சின் கீழ் நிலைபேறான அபிவிருத்தி செயலகம் அமுல்படுத்தப்படுவதுடன் வனப் பாதுகாப்பு திணைக்களமும் அந்த அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது. எனினும் வனப்பாதுகாப்பு திணைக்களம் மகாவலி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சின் கீழ் காணப்பட்டதுடன் ESCAMP உம் அந்த அமைச்சின் அமுல்படுத்தப்படுகின்றது. நிலைபேறான அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் உத்தியோகத்தர்கள் 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் சகல செயல்முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள், செயற்குழு கூட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப குழு கூட்டங்களில் என பிரதிநித்துவப்படுத்தப்பட்டிருந்தது. இறுதியில் நிலைபேறான செயலகம் உரிய பிரகாரம் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் பின்னர் அமைச்சும் மாற்றமடைந்திருந்தது. 2020 ஆம் ஆண்டு முதல் வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் முதலாவது தொகுதி வெற்றிகரமாக | சரியாக செயல் நடவடிக்கைகளை அமுல்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அமுல்படுத்திப்பட்டிருந்தது. உலக வங்கியின் விருப்பத்துடன் இந்த வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. | |
| iii. | ஈர வலயம் மற்றும் உலர் வலயங்களில் நிலத்தோற்ற திட்டம் தயாரித்ததன் பின்னர் அமுல்படுத்துவதற்கும், தேவையான சட்டரீதியான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கும் தேவையான நிறுவன ரீதியான பின்புலம் கணக்காய்வு செய்யும் வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை. | 2020 ஏப்ரல் மாதத்தில் உலக வங்கி செயற்பாடுகள் மற்றும் செயல்முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் சிலவற்றின் பின்னர் LMP வலயத்திற்காக குழுவை நியமிக்குமாறு வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு செயலாளருக்கு கோரிக்கை விடுவதற்கு வங்கி தீர்மானித்திருந்தது. அதன் பிரகாரம் வங்கி 2021 மே மாதம் ஆரம்பத்தின் போது அமைச்சிற்கு கோரிக்கை ஒன்று அனுப்பியிருந்தது. தேவையான ஏனைய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும். | நிறுவன ரீதியான கால அட்டவணை ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| iv. | நிலத்தோற்ற திட்டம் முகாமைத்துவத்துக்கு தேவையான அபிவிருத்தி செய்யப்படாத வலயங்களை இணங்காணல் மற்றும் வர்த்தமானியில் பிரசுரித்தல் என்பவற்றுக்காக தேவையான நடைமுறைகள் கணக்காய்வு திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | HKK மற்றும் SFR திட்டங்கள் வரைபடத்தில் பல்வேறு வலையங்களில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அதனால் அபிவிருத்தி செய்யப்படாத வலயங்களை வெளியிடுவதற்கு தனிப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தேவையற்றிருந்தது. | குறித்துரைத்த காலத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| v. | செயற்திட்டக் கூறு 2 பீ – யானை மனித சகவாழ்விற்கான முன்னைய விபத்துக்களை மதிப்பிடும் முறைமை ஒன்று இரண்டு கிராமங்களுக்கு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியிருந்த போதும் செயற்திட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு அது போதியளவாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | யானை முன்னைய விபத்துக்களை மதிப்பிடும் முறைமை சமூக அடிப்படையிலான மின்சார வேலிகளுக்காக மேலதிகமாக நியமிக்கப்பட்ட அடிப்படையில் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட சில இடங்களில் மாத்திரம் இந்த முறைமை பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டிருந்ததுடன் வெற்றிகரமான அல்லது பெறுபேற்றின் அடிப்படையில் இது மேலும் பிரதேசங்களுக்கு பரவலாக்க முடியும். மேலும் விரிவுபடுத்தவதற்காக அந்த நிதியம் முகவராண்மை நிறுவனத்தின் அங்கீகாரமும் தேவையாக இருந்தது. | செயற்பாடுகளின் மூலம் செயற்திட்ட நோக்கங்கள் அடையப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இந்த செயற்பாடுகள் ஆரம்ப பொன்மொழிவில் உள்ளடக்கப்படாதாதிருந்ததுடன் ITI பிரதான நிகழ்ச்சித்திட்டம் போதியளவான பெறுபேற்றின் அடிப்படையில் ஏனைய எதிர்கால பிரதேசங்களுக்காகவும் முறைமையை அறிமுகப்படுத்துவதற்குள்ள இயலுமை உள்ளது. | |
| vi. | செயற்திட்ட கூறு 2பீ இன் கீழ் 47 கிராம வேலிகள் மற்றும் 60 விவசாய வேலிகளை ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் 30 கிராமிய வேலிகளுக்காக தேவையான உபகரணங்கள் ரூபா 40.82 மில்லியன் தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் திட்டத்தின் பிரகாரம் வருடம் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பாட்ட கிராமங்கள் மற்றும் விவசாய வேலிகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | செயற்திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்ட 47 கிராம வேலிகளின் எண்ணிக்கை காணப்பட்டது. (குருநாகலில் 25 உம், அனுராதபுரம் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் 22) 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ஒன்பது வேலிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் மேலும் ஒரு வேலி குருநாகலில் பூர்த்தி செய்யும் நிலையிலும் காணப்பட்டது. மேலும் ஆறு வேலிகளின் நிர்மாணங்களும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. சில வேலிகளின் ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அனுராதபுரம் மற்றும் நிர்மாண நடவடிக்கைகள் இன்னும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.<br><br>திட்டமிடப்பட்ட கமத்தொழில் (வயல்) வேலிகள் அறுபது ஆகும். (ஒவ்வொரு மாவட்டத்திலும் முப்பது வேலிகள்) எனினும், இதுவரை இரண்டு மாவட்டங்களிலும் ஒரு விவசாய வேலியும் நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. (வேலிக்கான உபகரணங்களை கொள்வனவு செய்தல் ஆரம்பிக்கப்பட்டதுடன், கமநல அபிவிருத்தி திணைக்களம் ஊடாக கமத்தொழில் வேலிகளுக்காக முன்மொழிவு கோரப்பட்டிருந்தது) | செயற்திட்டத்தின் நோக்கங்கள் குறித்த கால எல்லையில் அடையப்பட வேண்டும். |